## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
## அசல் வழக்கு எண். 56/2017

2021 ஆம் ஆண்டு அக்டோபர்மாதம் 08–ம் நாள் வெள்ளிக்கிழமை என்பவரது சாட்சியாகிய இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி செல்வி. வெ. பார்கவி B.A.,B.L.,L.L.M.. மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 08.10.2021 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | ஜெயபாரதி (PW-1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | சமயம்: | |
| சாதி: | | வயது : | |
| தொழில்: | | | |

**முதல் விசாரணை: 08.10.2021**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

23.06.2007 தேதியிட்ட எனது தாயார் கலா தர்மலிங்கம் என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 08.05.1989 தேதியிட்ட எனது தாயார் கலா பெயருக்கு நாகரெத்தினம் என்பவர் எழுதிக்கொடுத்த உயில் பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 30.11.2011 தேதியிட்ட

தாவாச்சொத்தை பொறுத்து எனது தாயாா் கலா எனது பெயருக்கு எழுதிக்கொடுத்த உயில் பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 27.02.2017 தேதியிட்ட தாவாச்சொத்திற்கு உண்டான கணினி பட்டாவை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 21.03.2012 தேதியிட்ட எனது தாயாா் கலாவின் இறப்பு சான்றிதழின் அசலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 19.12.2016 தேதியிட்ட 1ம் பிரதிவாதி அலுவலகத்தில் பட்டா பெயா் மாற்றம் செய்து தரவேண்டிகொடுத்த மனுவின் அசலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடா்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.